Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 20 செவ்வாய்க்கிழமை (06-10-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 313

# மாகாணசபை முறை: ஒழிப்பதற்கு அரசு முடிவு

## எதிரணியும் ஆதரவு வழங்கும்?

கொழும்பு, அக்டோபர் 6

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின்படி நிறுவப்பட்ட மாகாண சபைகளைக் கலைத்துவிட்டு, அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட-பிரதேசசெயலாளர்களின் அலுவலகங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்கும்—நடைமுறையை அமுலுக்குக் கொண்டு வருவதில் அரசு ஈடுபாடு காட்டுகிறது.

நம்பத்தகுந்த வட்டாரங்களை ஆதாரம் காட்டி, "லங்காதீப" வார இதழ் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

அரசின் செலவினங்களைக் குறைக்கும் ஒரு நடவடிக்கையாகவே மாகாண சபைகளைக் கலைப்பதற்கு ஆலோசிக்கப்படுவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மாகாண சபைகள் முறையை ஒழிப்பதனால், அதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும்.

மாகாணசபை முறையை ஒழிப்பதற்கு எதிர்க்கட்சிகளிடமிருந்து முழு ஆதரவு கிடைக்கும் என அரசு எதிர்பார்க்கிறது.

மாகாணசபை முறையை ஒழிக்குமாறு ஏற்கனவே மக்கள் ஐக்கிய முன்னணி

(2 ஆம் பக்கம் பார்க்க)

## 12 வேங்கைகளின் நினைவு நாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், அக். 6

பலாலி ஸ்ரீலங்கா இராணுவ முகாமில் உயிர் நீத்த லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரு மாவீரர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நேற்றுக் குடாநாடெங்கும் உணர்வு பூர்வமாக அனுட்டிக்கப்பட்டது.

பல பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் தத்தமது பிரதேசங்களில் உள்ள பன்னிரு வேங்கைகளின் நினைவுச் சின்னங்களுக்கும் மலரஞ்சலி செய்து நினைவு கூர்ந்தார்கள். ஏனைய பல இடங்களில் பன்னிரு வீர வேங்கைகளின் திருவுருவப் படங்களை வைத்தும் மக்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

வீதிகள், முக்கிய சந்திகளிலும், வர்த்தக நிறுவனங்கள்,

**மேலும் செய்திகள் 6 ஆம் பக்கத்தில்**

தனியார் வீடுகளின் முன்னாலும் சிவப்பு மஞ்சள் கொடிகள் அலங்கரிக்கப்பட்டு பன்னிரு வேங்கைகளின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

பன்னிருவரின் திருவுருவங்கள் வைக்கப்பட்ட வாகனங்கள் குடாநாட்டின் பல இடங்களுக்கும் சென்றபோதும் ஏராளமான மக்கள் வீரவேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

தென்மராட்சிப் பகுதியில் காலையிலும் நண்பகலிலும் பெருமழை பெய்தபோதிலும் ஏராளமான மக்கள் அஞ்சலி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய ராணுவ உதவியைப் பெற இலங்கை ராணுவம் விரும்புகிறது

### இந்து நாளிதழ் தகவல்

புதுடில்லி அக். 6

விடுதலைப்புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் முறியடிப்பதற்கு இந்திய இராணுவத்தின் உதவியைப் பெறுவதற்கு இலங்கைப் படைகள் தற்போது விரும்புகின்றன என 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளைத் தொடர இராணுவத்தினருக்கு கூடுதலான ஆயுதங்களும் தளபாடங்களும் தேவை.

இலங்கை இராணுவத்துக்கு இந்திய இராணுவத்துடன் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன.

இலங்கை இராணுவத்தின் அதிகாரிகள் இந்தியாவில் பெறும் பயிற்சிகளும் இலங்கையில் இந்திய அமைதிப் படை பெற்ற அனுபவங்களும் குறிப்பிடத்தக்கவை.

இந்திய அமைதி காக்கும் படையினரின் நடவடிக்கைகளைத் தொடர அனுமதித்திருந்தால், அவர்கள் புலிகளை நிராயுத பாணிகளாக்கியிருப்பர் என இலங்கை இராணுவம் நம்புகிறது.

ஆனால் இந்திய அமைதி காக்கும் படை தொடர்பாக 1989 க்குப் பின்னர் இருக்கும்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அடுத்த தாக்குதல் கொழும்பில் நடக்குமாம்!

### சிங்கள வார இதழ் கூறுகிறது

கொழும்பு அக். 6

புலிகள் தாக்குதல் நடத்தக்கூடிய அடுத்த இலக்கு கொழும்பாக இருக்கலாம் எனப் புலனாய்வுத்துறை வட்டாரங்கள் தெரிவிப்பதாக கொழும்பு சிங்கள வாரப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் கைது செய்யப்பட்ட —புலிகள் இயக்க உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும்— ஒருவர் கொடுத்த தகவல்கள் மூலம், கொழும்பில் வெடிக்க வைக்கக் கொண்டு வரப்பட்ட சில குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு மாதங்களுக்கு முன் மட்டக்களப்பிலிருந்து இரு வாகனங்களில் குண்டுகள் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்களுக்கு தகவல் கிடைத்ததாயினும் அவை இது வரையில் கண்டுபிடிக்கப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-10)

## 4 சிங்கள மீனவர் தமிழகத்தில் கரை ஒதுங்கினர்

கொழும்பு, அக். 6

தென் இலங்கையைச் சேர்ந்த நான்கு சிங்கள மீனவர்கள் சென்னை நகரில் உள்ள காசிமேடு என்னுமிடத்தில் கரை ஒதுங்கினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களின் படகு இயந்திரக் கோளாறு மற்றும் புயல் காரணமாக அலைக்கழிக்கப்பட்டதனால் இவர்கள் வழியைத் தவற விட்டனர் என்றும்—

கடலில் ஒரு மாத காலமாக மழை நீரை அருந்தி, பச்சை மீனைச் சாப்பிட்டு வாழ்ந்து வந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## கடலில் மிதந்த சடலம்

தென்மராட்சி, அக். 6

உடம்பில் சூட்டுக் காயங்களுடன் கிளாலிக் கடலில் மிதந்த ஆணின் சடலம் ஒன்று நேற்று முன்தினம் படகோட்டிகளால் கண்டெடுக்கப்பட்டு டாக்டரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை 8 மணியளவில் கடற்படையினர் சுட்டபோது இவர் மரணமாகி இருக்கலாமென தெரிவிக்கப்பட்டது. (உ-177)

## ஏறாவூரில் பாலம் தகர்ப்பு

கொழும்பு, அக். 6

ஏறாவூர் பொலிஸ் நிலையத்திலிருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில்—தம்பலவெளி என்னுமிடத்தில் இருந்த சித்தாண்டி—வந்தாறுமூலை பாலம் கண்ணிவெடி வைத்துத் தகர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## கைப்பற்றப்பட்ட வாகனங்களில் ஒன்று அதிகாரியினுடையது!

கொழும்பு, அக். 6

கட்டைக்காடு முகாமில் புலிகளால் கைப்பற்றப்பட்ட வாகனங்களில் ஒன்று முகாம் பொறுப்பதிகாரியின் வாகனம் என்றும்—

அதில் வானொலித் தொடர்பு சாதனங்கள் இணைக்கப்பட்டிருந்ததாகவும்—

பாதுகாப்புப்படை வட்டாரங்கள் குறிப்பிட்டதாக ஏஜென்ஸிச் செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

(உ-10)

## யாழ். நகர் மத்தியில் புதிய வீதி

யாழ்ப்பாணம், அக். 6

யாழ். நகரின் மத்தியில் புதிய வீதி ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

யாழ். ஸ்ரான்லி வீதியையும், யாழ். நகர பஸ் நிலையப் பகுதியையும் இணைத்து புல்லுக்குளத்துக்கு அருகாமையாகச் செல்லும் புதிய வீதியின் அமைப்பு வேலைகள் தற்சமயம் முடிவடைந்துள்ளன.

யாழ். ஸ்ரான்லி வீதியில் இலங்கை வங்கிக் கிளைக்கு அருகாகச் செல்லும் இப் புதிய வீதி, பாவனைக்கு வந்ததும் யாழ். கஸ்தூரியார் வீதியில் போக்குவரத்து நெருக்கடி குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் புதிய வீதி விரைவில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## உடுகம்பொலவின் கொழும்பு வீடு உடைப்பு!

கொழும்பு, அக். 6

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொலவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டுள்ளதாக அவரது சகோதரர் இராணுவ மேஜர் பத்மசிறி உடுகம்பொல பொலீஸில் முறையிட்டுள்ளார்.

உடுகம்பொல பதவியிலிருந்த போது இந்த வாசஸ்தலம் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. தலைமறைவாகிவிட்டபோதிலும் கறுவாக்காட்டுப் பகுதியிலுள்ள இந்த வாசஸ்தலம் இன்னமும் உடுகம்பொலவின் பொறுப்பிலேயே இருந்துவருகிறது.

(உ-ம-10)

## ஐயாயிரம் ஆசிரியருக்கு அதிபர் பதவி!

கொழும்பு, அக். 6

ஐயாயிரம் ஆசிரியர்களுக்கு அடுத்த வாரம் அதிபர் பதவி வழங்கப்படவிருப்பதாக கல்விச் சேவை சபையின் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்தார்.

பல வருடங்களாக அதிபர் பதவிகளுக்கு நியமனங்கள் செய்யப்படாமலிருந்தது என்றும்—

இப்போது "இலங்கை பாடசாலை அதிபர் சேவை" என்ற பெயரில் புதிய சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இந்த நியமனங்களைச் செய்ய முடிந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பரீட்சை ஆணையாளரால் நடத்தப்பட்ட பரீட்சையின் முடிவுகளுக்கமைய அதிபர் சேவையின் I ஆம், II ஆம், III ஆம் தரங்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும் எனவும் திரு. மெண்டிஸ் மேலும் தெரிவித்தார். (உ-10)

## லேக் ஹவுஸுக்கு எதிரணி எம். பி. நோட்டீஸ்

கொழும்பு, அக். 6

சுதந்திரக் கட்சி எம். பி யான திலக் கருணாரத்னா ஐம்பது லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி லேக்ஹவுஸ் பத்திரிகைகளுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சியில் இருந்து தாம் இடைநிறுத்திவைக்கப்பட்டிருப்பதாக பொய்யான செய்தி வெளியிட்டு, தமக்கு அவதூறு ஏற்படுத்தியதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன்னோடியாக திரு. கருணாரத்னா இந்த நோட்டீஸை அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனவரி முதல்

# சுகாதார சேவைகள் பன்முகப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், அக். 6

யாழ். மாவட்டத்தில் சுகாதார சேவைகள் பன்முகப்படுத்தப்பட்டு, எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 14 பிராந்திய சுகாதார நிலையங்களாக செயற்படவிருக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலகங்களுடன் இணைந்ததாக இந்த நிலையங்கள் அமையும். இந்த நிலையங்களுக்கு பொறுப்பாக பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

அந்தந்த பிரதேசங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளை இந்த நிலையங்கள் பராமரிக்கும். அத்துடன் நோய்த்தடுப்பு சேவையையும் அவை மேற்கொள்ளும்.

யாழ். மாவட்டத்தில் தற்சமயம் யாழ் மாநகரசபை சுகாதார அதிகாரி பிரிவு உட்பட 8 சுகாதார அதிகாரிகள் பிரிவுகள் இயங்குவது குறிப்பிடத்தக்கது.

வடக்கு — கிழக்கு மாகாணத்திற்கு பொதுவான ஒரு மாகாண சுகாதாரப் பணிப்பாளரும், 5 மாவட்டங்களுக்கும் பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர்களும் புதிய மாற்றத்தின் படி கடமை ஆற்றுவர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஒரு மாவட்டமாகவும், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகியன ஒரு மாவட்டமாகவும், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகியன தனி மாவட்டங்களாகவும் மொத்தம் 5 மாவட்டங்கள் செயற்படும். [த-3-5]


## வைத்திய சேவை

வாத ரோகமா? பீநிச ரோகமா? தலைமுடி உதிர்தலா? தலைமயிர் நரைத்தலா? உடல் பருமனா? குழந்தைகளின் வியாதிகளா? மாதர்களின் வருத்தங்களா? சிறந்த சிகிச்சையும், உரிய ஆலோசனையும் கிடைக்கும்.

தொடர்பு: டாக்டர் த. சிவானந்தன்

**சிவா வைத்தியசாலை**

384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.

நேரம்: காலை 8.30 முதல் 12.30 வரை
(தினமும்) பிற்பகல் 2.30 முதல் 6.00 வரை

குறிப்பு: கிளைகள் கிடையாது. [22785]



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளை தலைமையகம்

## "இருட்டில் ஒளி ஏற்றுவோம்"

★ உயிர் காப்பு, முதலுதவி ★ உள்ளூர் உற்பத்தி
★ வைத்திய உதவி ★ சுயதொழில் ஊக்குவிப்பு
★ இரத்த தானம் ★ தொழில் கல்வி
★ அகதிகள் பிரச்சனை ★ சமூக அபிவிருத்தி
★ தொண்டர்கள் சேவை ★ தன்நிறைவான சமுதாயம்

உங்கள் உதவி இவற்றுக்கு அவசியம்

கொடிவாரம் 1992 அக்டோபர் 7 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை

எங்கள் உறுப்பினர் உங்கள் வீடு வருவார்கள்,
உங்கள் அன்பிற்காக, அன்பளிப்புக்காக
வாரி வழங்குங்கள் — நம் மக்கள் வாழ்வுக்காக
வாரி வழங்குங்கள்!

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
04 - 10 - 92. (சி-3448)



## நன்றி நவிலலும் 90ஆம் நாள் நினைவஞ்சலியும்

### வீரவேங்கை அன்பழகன்

( கோபாலர் விஸ்வேஸ்வரன் - கருகம்பனை )

தோற்றம்: 21-09-1970 வீரமரணம்: 09-07-1992

இயக்கச்சியில் வீரமரணமடைந்த அன்பழகனுக்கு [கோபாலர் விஸ்வேஸ்வரன்] இறுதி அஞ்சலியைச் செலுத்த வந்த உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் அன்னாரின் இறுதிப் பயணம் சிறப்புற நடைபெற உதவிய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் நல்லூர் கைலாசபிள்ளையார் விளையாட்டுக் கழகத்தினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், சென்ற வருடம் — 18-7-91இல் — லெப். நெல்சனின் [கோபாலர் சுந்தரேசன்] வீரமரணத்தைக் கேள்வியுற்று எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றி.

எமது இல்லத்தில் 7-10 92 இல் புதன்கிழமை நடைபெற இருக்கும் இருவரது நினைவஞ்சலியிலும், அதனைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

198 கோயில் வீதி,
நல்லூர். — குடும்பத்தினர்
[22786]


## மழையின் மத்தியிலும் பக்தர்கள் கூட்டம்

வரலாற்றுச் சிறப்புப் பெற்ற வல்லை ஸ்ரீ வேங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த் திருவிழா நேற்று பக்தி பூர்வமாகவும், சிறப்பாகவும் நடைபெற்றது.

காலை 9.15 மணிக்கு பெருமாள் ஸ்ரீ தேவி பூதேவி சமேதராய் தேரில் எழுந்தருளி முற்பகல் 10 30 மணியளவில் இருப்பிடம் வந்தடைந்தார். நேரில் காலையில் மழை பெய்த போதிலும் பெருந்திரளான பக்தர்கள் தேர்த் திருவிழாவுக்கு வந்திருந்தனர்.

### மாகாணசபை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கோரிக்கை விடுத்துள்ளது.

மாகாணசபைகளை ஒழிக்கும் பிரேரணை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டால் —

இலங்கை-இந்திய ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட காலத்திலிருந்தே மாகாணசபை முறையை எதிர்த்து வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பிரேரணைக்கு ஆதரவளிக்குமென அக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு 'லங்காதீப' பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது. (உ-10)

### 12 வேங்கைகளின்...

[1 ஆம் பக்கம் தொடர்ச்சி]

டனர். திருவிலில் நடைபெற்ற நினைவு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் செல்வதற்காக பெரும் எண்ணிக்கையான மக்கள் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நேற்று நண்பகல் 12 மணிக்குத் திரண்டனர்.

யாழ் நகரப் பகுதியில் பல இடங்களிலும் பன்னிரு வேங்கைகளுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. நல்லூர் கந்தசுவாமி கோவில் முன் வீதியில் வைக்கப்பட்டிருந்த வீரவேங்கைகளின் திருவுருவப் படங்களுக்கு ஏராளமான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

வர்த்தக நிறுவனங்கள், பொது ஸ்தாபனங்கள், தனியார் கல்வி நிறுவனங்களிலும் வீரவேங்கைகளின் திருவுருவப் படங்கள் அலங்கரிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்று தேநீர்க் கடைகள், மருந்துக் கடைகள் தவிர ஏனைய வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

குருநகர்ப் பகுதியிலும் பன்னிரு வேங்கைகளுக்கும் மக்கள் பல இடங்களிலும் அஞ்சலி செலுத்தினர். திருவிலில் நடைபெற்ற நினைவுக் கூட்டத்திற்கு குருநகரில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் சென்றனர்.

சுன்னாகப் பகுதியிலும் அஞ்சலி நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. சுன்னாகம் சந்தியில் பெரிய பந்தல் அமைக்கப்பட்டு பன்னிரு வேங்கைகளின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

### இந்திய...

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

அரசியல் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில் இராணுவ தளபாட விநியோகத்துக்கு(இராணுவத்துக்கு உதவியாக டாங்கிகள் மற்றும் விமானப்படை வாது காப்பு ஆகியவற்றைப் பெறுவதில்) இந்தியாவின் உதவியை நாடுவதே வடக்கு, கிழக்குப் போரை முன்னெடுப்பதற்கான அடுத்த சிறந்த நடவடிக்கை என இலங்கை இராணுவம் உணருகிறது.

ஆனால் அத்தகைய எந்த உதவியையும் பெறுவதற்காக இலங்கை அரசாங்கம் இந்தியாவை அணுகப் போவதில்லை புலிகளுடனான எதிர்காலப் பேச்சுவார்த்தைகளுக்கான கதவை மூடிவிடவும் அரசாங்கம் விரும்பவில்லை என்பதையும் இராணுவம் புரிந்து வைத்திருக்கிறது. இதனால்தான் இராணுவத்துக்கும் அரசுக்கும் இடையில் இந்த விரிசல் ஏற்பட்டுள்ளதாக அந்தப் பத்திரிகை கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளது. (உ-ம)

# மீண்டும் ஜே.வி.பி. தலைதூக்குகிறதா?

## சிங்கள வார இதழ் தகவல்

"ஜே. வி. பி. பயங்கரவாதம் மீண்டும் தலை தூக்குகிறதா?" என்னும் தலைப்பில் அரச சார்பு சிங்கள வார இதழ் முக்கால் பக்க செய்தி விவரணம் ஒன்றை படங்களுடன் பிரசுரித்துள்ளது.

★ ரயில்வே ஊழியர்களின் சம்பளப் பணம் 48 லட்சம் கொள்ளை.

★ வீரக்கெட்டியவில் காட்டிற்குள் ஆயுதக் களஞ்சியம் கண்டுபிடிப்பு.

★ கிளர்ச்சிக்குழுவென்று குருநாகலில் கைது.

★ வீரக்கெட்டியாவில் கைதான பயங்கரவாதக் குழுத் தலைவர் வங்கிக் கொள்ளைகள் பற்றிய துப்புகளை வெளியிடுகிறார்.

— ஆகிய தலைப்புகளில் செய்திகளும் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் படங்களும் இந்தப் பக்கத்தில் பெரிய அளவில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (உ-10)

## மா விலை குறைப்பை அடுத்து

# தேர்தல் காலச் சலுகையாக சீனி, பருப்பு விலை குறையும்?

கொழும்பு, அக். 6

மாவின் விலை குறைப்பைத் தொடர்ந்து சீனி மற்றும் பருப்பின் விலைகளையும் அரசு குறைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் மாகாணசபைத் தேர்தல் அல்லது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பதைத் தொடர்ந்து, பொதுமக்களை அழுத்தும் முறைப்பாடுகளுக்கு நிவாரணம் உடனடியாகக் காணப்படவேண்டும் என்று அரசின் ஆலோசகர்கள் வற்புறுத்தி வருகின்றனர் என்றும் —

மாவின் விலைக் குறைப்பு, பொதுமக்கள் மீதான அழுத்தங்களைக் குறைக்கும் நடவடிக்கைகளில் ஒன்று என்றும் —

அத்தியாவசிய பொருட்களான சீனி மற்றும் பருப்பு போன்ற பொருட்களின் விலைகளும் விரைவில் குறைக்கப்படலாம் என்றும் 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது. [உ-எ]

## வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

# உழவு இயந்திரங்களின் உரிமையாளர் தொடர்பு கொள்ளக் கோரிக்கை

கொழும்பு, அக். 6

வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வடபகுதி உழவு இயந்திரங்களின் உரிமையாளர்களை உடனடியாகத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் சார்பில் அதன் தலைவர் எஸ். எம். சொர்ணபாலா கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு— கிழக்குப் பாதுகாப்பு, புனரமைப்பு, உணவு விநியோகம் தொடர்பான அமைச்சரவைக் கூட்டம் அமைச்சர் பி. தயாரத்தினா தலைமையில் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட வவுனியா மாவட்டப் பிரஜைகள் குழுத் தலைவர் எஸ். எம். சொர்ணபாலா — வடபகுதியிலிருந்து வவுனியா வந்த நூற்றுக்கு மேற்பட்ட உழவு இயந்திரங்கள் இராணுவத்தினரால் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சரிடம் முறைப்பாடு செய்தார்.

இக்கூட்டத்தில் இராணுவ தரப்பில் கலந்து கொண்ட பிரிகேடியர் அசோக ஜயவர்த்தனாவிடம் அமைச்சர் இது பற்றி விசாரித்தபோது — இது குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் — விவரங்களை சொர்ணபாலா தந்தால் தாம் அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

அவற்றை விடுவிக்குமாறு அமைச்சர் தயாரத்தினாவும் கேட்டுக் கொண்டார். (த)

## நவீல்ட் மாணவர்களுடன் ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், அக். 6

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி இன்றாக்ட் கழகத்தினர் நவீல்ட் பாடசாலை மாணவர்களை அழைத்து நாளை பிற்பகலில் ஒன்று கூடல் நிகழ்ச்சி ஒன்றை நடத்தவுள்ளனர்.

நாளை பிற்பகல் 12-45 மணிக்கு சென். ஜோன்ஸ் ஜூபிலி மண்டபத்தில் இந்நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

கூடைப்பந்தாட்டம், கரப்பந்தாட்ட காட்சி ஆட்டங்களும்—

நவீல்ட் மாணவர், மாணவிகள் அணிகளுடனான வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் ஆகியவையும் நிகழ்ச்சிகளில் இடம்பெறவிருக்கின்றன. (உ)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், அக். 6

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையில் விலகல் முறையில் நடத்தும் இரண்டு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளின் இரண்டு ஆட்டங்கள் இன்று மாலை 3 30 மணிக்கும் 4.30 மணிக்கும் கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

முதல் சுற்றுப்போட்டியின் ஆட்டத்தில் பொற்பதி அணியை எதிர்த்து கலைவாணி அணி மோதும்.

மற்றைய ஆட்டத்தில் திருமலை டைமர் அணியை எதிர்த்து யாழ். பாரதி அணி விளையாடும். (உ)

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், அக். 6

வேலணைக் கல்விக் கோட்ட கணித - விஞ்ஞான ஆசிரியர் மன்றத்தின் ஏற்பாட்டில் முன்னாள் கல்வி அதிகாரி அமரர் க. சண்முகநாதன் நினைவுப் பேருரை நாளை பிற்பகல் 3.30 மணி முதல் கண்டிக்குளி சென். ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெறும்.

வேலணை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில், யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை "பிரதேசமும் பிரதேச அபிவிருத்தியும்" என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

# ஸ்ரீலங்காவுக்கு மீண்டும் மனித உரிமை குழு விஜயம்

கொழும்பு, அக். 6

கடத்திச் செல்லப்பட்டு காணாமற்போனவர்கள்பற்றி விசாரித்து வரும் ஐ. நா. மனித உரிமைகள் குழுவின் ஐந்து உறுப்பினர்களில் இருவர் கடந்த சனிக்கிழமை கொழும்பு வந்தனர்.

குழுவின் ஏனைய மூன்று உறுப்பினர்களும் இன்னும் ஓரிரு தினங்களில் இலங்கைக்கு விஜயம் செய்யலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதம் 15 ஆம் திகதி வரை நாட்டில்தங்கியிருக்கும் இக்குழுவினர், வடக்கு-கிழக்கு பகுதிகள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று மனித உரிமை நிலைவரம் பற்றி நேரடித் தகவல்களைப் பெறுவதில் ஈடுபடுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இக்குழுவின் இரண்டாவது இலங்கை விஜயம் இதுவாகும். கடந்த ஆண்டில் முதல் தடவையாக இக்குழுவினர் இலங்கை வந்தபோது, மனித உரிமை பேணல்பற்றி பல யோசனைகளைக் கொழும்பு அரசுக்குச் சமர்ப்பித்து இருந்தனர்.

அந்த யோசனைகள் அமுல் நடத்தப்படுவதில் காணப்படும் முன்னேற்றம் பற்றியும் இப்போதைய விஜயத்தின் போது இக்குழுவினர் மதிப்பீடு செய்வார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மனித உரிமைவாதிகள் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் ஆகியோரையும் குழுவினர் சந்திப்பர் என்று குழுவின் செயலாளர் சோபியா டிஜிட்டெல்பெலிம்ப் தெரிவித்தார். (உ-எ)

## கொழும்புத் துறைமுகத்தில் புதிய கடற்படை முகாம்

கொழும்பு, அக். 6

கொழும்பு துறைமுகத்தினுள் சகல வசதிகளுடனும் கூடிய புதிய கடற்படை முகாம் ஒன்று அமைக்கப்பட உள்ளது.

ஐந்து மாடிகளைக் கொண்ட இந்த புதிய கடற்படை முகாம் 700 கடற்படை மாலுமிகளும், அதிகாரிகளும் தங்குவதற்குரிய விடுதி வசதியையும் கொண்டிருக்கும்.

துறைமுக அதிகாரசபை இந்த கட்டடத்தை இலங்கை கடற்படைக்கு அமைத்துக் கொடுக்கும். கட்டட நிர்மாணப் பணிகளுக்கு துறைமுக அதிகாரசபை 21 கோடி ரூபாவை செலவிடும். (த-ம)

## படுகாயம்

ஹற்றன் - டிக்கோயாவில் ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் மேல்மாடி திடீரென இடிந்து விழுந்ததில் 50 பேர் படுகாயமுற்றனர்.

படுகாயமடைந்த 50 பேரில் அனேகமானோர் தொழிற்சாலையின் ஊழியர்களாவர்.

## ஹெரோயின் கடத்திய தமிழ் இளைஞர் கைது!

கொழும்பு, அக். 6

பதினைந்து லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதை வஸ்துவைக் கடத்தி வந்த 22 வயது இளைஞர் பெருமாள் நடராஜ் என்பவரை கடந்த வெள்ளிக்கிழமை இரவு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து போதைத் தடுப்பு பொலீஸார் கைது செய்தனர்.

சென்னையில் இருந்து எயர் லங்கா விமான மூலம் வந்த அவரைப் பொலீஸார் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்குட்படுத்திய போது ஆயிரத்து 560கிராம் ஹெரோயின் அவர் கொண்டு வந்த பல பொருள்களினுள் மறைத்து வைத்து இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது. சந்தேக நபரை அழைத்துச் செல்ல விமான நிலையம் வந்திருந்த இளைஞர் ஒருவரையும் பொலீஸார் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-எ)

## சங்கானை உ.அ.அ. பிரிவில் தொழுநோய் பரவும் ஆபத்து

யாழ்ப்பாணம், அக். 6

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தொழுநோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக அறியவருகிறது.

இப்பகுதியில் 55 பேர் தொழுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 206 குடும்பங்களில் இந்நோய் பரவியுள்ளது என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள முகாம்களிலும், மற்றும் கிராமங்களிலும் தொழுநோயினால் பலர் பாதிக்கப்பட்டு வருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ். செயலகத்தில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றுகையில் சங்கானை உதவி அரச அதிபர் செல்வி ஆர். கனகரட்ணம் மேற்படி தகவலை வெளியிட்டார். (த-ம-5)

# தமிழீழ விடுதலைப் போராட்டம் மூலம் உலகத் தமிழ்த் தேசிய விழிப்புணர்வு

## புலிகளின் தியாகமும் வீரமும் தமிழினத்தை தலைநிமிர வைத்துள்ளன

(முன்னைய தொடர்ச்சி)

சுமார் 2 லட்சம் ஈழத் தமிழர்கள் உலக நாடுகளுக்கும் சுமார் 3 லட்சம் ஈழத் தமிழர்கள் தமிழ் நாட்டிற்கும் அகதிகளாக ஓடிவந்தனர். பிற நாடுகள் தமிழ் அகதிகளுக்குச் செய்திருக்கிற மனிதாபிமான உதவியில் பாதியையாவது தமிழகத்தில் தஞ்சம் புகுந்த ஈழத் தமிழ் அகதிகளுக்குத் தமிழக அரசு செய்துள்ளதா? நிச்சயமாக இல்லை.

வேண்டாத விருந்தாளிகளாக அவர்கள் நடத்தப்படுகின்றனர். அகதிகள் முகாம்கள் உண்மையில் சிறை முகாம்களாகத்தான் காட்சி தருகின்றன. சிங்கள வெறியர்களிடம் அனுபவித்த கொடுமை பரவாயில்லை என நினைக்கும் அளவுக்கு ஈழத்தமிழர்கள் ஆளாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அளிக்கப்படும் உதவியில் பெரும் ஊழல் நடக்கிறது. அவர்களது குழந்தைகளுக்குக் கல்வி மறுக்கப்படுகிறது.

### தமிழகத் தலைவர்கள் செய்யாததை தலைவர் பிரபாகரன் செய்கிறார்!

நம்மை நம்பி அடைக்கலம் புகுந்திருக்கும் நமது சகோதர, சகோதரிகள் என்ற பாச உணர்வுடன் அவர்களை நடத்தாமல் எதிரிகளைப் போல அவர்கள் அரசு அதிகாரிகளால் நடத்தப்படுகின்றனர்.

ஈழத் தமிழர்களது சுதந்திரப் போராட்டத்தை நசுக்க இந்திய இராணுவம் அனுப்பப்பட்டபோது தமிழக அரசும் முக்கிய கட்சிகளும் மௌனம் சாதித்தன. இந்திய இராணுவம் 7,000 தமிழர்களைக் கொன்று குவித்துத் தமிழீழத்தைச் சுடுகாடாக மாற்றியபோது தாய்த்தமிழகம் உணர்வற்றுக் கிடந்தது. இந்தியாவின் முக்கிய கட்சிகள் எதுவும் இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களைக் கண்டிக்க முன்வரவில்லை.

### தியாகத் தமிழர்கள்

காந்தியடிகள் அரசியலில் அடியெடுத்து வைத்துத் தென்னாப்பிரிக்காவில் அறப்போராட்டம் தொடங்கிய போது அவருக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக நின்றவர்கள் தமிழர்கள். தில்லையாடி வள்ளியம்மையின் தியாக உணர்வு காந்தி அடிகளைக் கண்ணீர்விட வைத்தது.

இந்தியாவின் சுதந்திரத்திற்காக நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஆயுதந் தாங்கிய போராட்டத்தைத் தொடங்கியபோது அவரது படையில் சேர முன்வந்தவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள்.

காந்திஜியின் அறப்போராட்டமானாலும், நேதாஜியின் ஆயுதப் போராட்டமானாலும் அவர்களுக்குத் தமிழர்கள் பெருந்துணையாக நின்று தியாகம் செய்தார்கள்.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்காகத் தமிழர்கள் தோள் கொடுத்துத் துணை நின்றார்கள். காந்தியடிகளும் நேதாஜியும் மனம் விட்டுப் பாராட்டும் அளவுக்கு தியாகம் செய்தார்கள். ஆனால் சுதந்திர இந்தியாவின் படை நமது சகோதரர்களை ஈழத்தில் கொன்று குவித்தது. இந்தச் சுதந்திரத்தைப் பெறுவதற்குத்தானா தமிழர்களும் சேர்ந்து போராடினோம்?

### பிற மாநிலத் தமிழர் நிலை

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் நிலை இப்படி என்றால், இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழும் தமிழர்களின் நிலை இதை விட மோசமாக உள்ளது. பிற நாட்டுத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழகத்தை நோக்கி ஓடி வந்த நிலை போய், பிற மாநிலத் தமிழர்கள் அகதிகளாக ஓடி வருகிற நிலை உருவாகி உள்ளது. கர்நாடகத்திலிருந்து ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் அடித்துத் துரத்தப்பட்டுக் கண்ணீரும், கம்பலையுமாகத் தமிழகம் வந்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் வாழும் தமிழர்களுக்கும் இந்த நிலை நேரிடக் கூடிய அபாயம் நீடிக்கிறது.

### உலகத் தமிழருக்கு எழுச்சியூட்ட தமிழகத் தலைவர் தவறினர்

உலகின் பல நாடுகளில் சுமார் ஒரு கோடிக்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கின்றனர். இந்தியாவின் பிற மாநிலங்களிலும் அதே அளவு தமிழர்கள் வாழ்கின்றனர். இந்த 2 கோடித் தமிழர்களின் நலனைப் பாதுகாப்பது 5 கோடித் தாய்த் தமிழர்களின் கடமையாகும்.

தாய்த் தமிழ்நாடு விழிப்புற்று இருந்தால்தான் தன்னையும் காக்க முடியும்; சேய்த் தமிழர்களையும் காக்க முடியும்.

தாய்த் தமிழகம் போலித் தலைவர்களையும் அவர்களின் ஆரவார அரசியலையும் நம்பி ஏமாந்து விட்டது. தமிழினத் தலைவர்கள் எனத் தங்களுக்குத் தாங்களே பட்டம் சூட்டிக் கொண்டவர்கள் தன்னலத் தலைவர்களாகக் காட்சி தந்தார்கள்.

உலகத் தமிழர்களுக்கு எழுச்சியூட்டி வழிகாட்ட வேண்டிய கடமையில் இருந்து இவர்கள் தவறிவிட்டார்கள்.

### பிரபாகரன் பெருமை

ஆனால் தாய் செய்யத் தவறிய கடமையைச் சேய் மேற்கொண்டு விட்டது. ஆம்! பிரபாகரன் தலைமையில் விடுதலைப் புலிகள் நடத்தி வரும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழீழ மக்கள் மத்தியில் மட்டுமல்ல; உலகத் தமிழர்களின் நடுவே மகத்தான திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளின் தியாகமும், வீரமும் தமிழினத்தைத் தலை நிமிர வைத்துள்ளன. புலிகள் படைத்து வரும் புதிய புறநானூறு தமிழர்களின் பெருமையைப் பாரறியச் செய்துள்ளது. தமிழ் நாட்டுத் தலைவர்கள் எவராலும் இதுவரை தமிழினத்திற்குத் தேடிக் கொடுக்க முடியாத பெருமையைப் பிரபாகரன் தலைமையில் விடுதலைப் புலிகள் தேடித் தந்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் உலகெங்கும் உள்ள தமிழர்களிடையே தமிழ்த் தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இந்த உணர்வு மேலும் கட்டி வளர்க்கப்பட வேண்டும்.

பாலஸ்தீனிய விடுதலைப் போராட்டம் உலகெங்கும் உள்ள அராபியர்களைத் தட்டி எழுப்பி அவர்களிடையே அராபியத் தேசிய உணர்வை ஊட்டி ஒன்றுபட வைத்தது.

அதைப் போலத் தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழ்த் தேசிய உணர்வை ஊட்டி உலகத் தமிழர்களை ஒன்றுபட வைக்கும். அதற்கான முயற்சிகளில் ஒவ்வொரு தமிழரும் ஈடுபட வேண்டும்.

### நால்வகைத் திட்டம்

இதற்காகக் கீழ்க்கண்ட திட்டங்கள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

1. உலகத்தமிழர் அமைப்பு.
2. உலகத் தமிழருக்குக் கொடி.
3. உலகத் தமிழர் கீதம்.
4. உலகத் தமிழருக்குத் தேசிய உடை.

உலகெங்கும் உள்ள தமிழர்களை ஒன்று கூட்டி உலகத் தமிழர் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

உலகத்தமிழ்க்கொடி ஒன்று உருவாக்கப்பட வேண்டும். எந்த நாட்டுத் தமிழர்களாக இருந்தாலும், அவர்கள் வாழும் நாட்டுக் கொடிகளுடன் உலகத் தமிழர் கொடியையும் சேர்த்துப் பறக்கவிட வேண்டும்.

உலகில் வாழும் தமிழர்கள் எங்கு கூடினாலும் அங்கு அவர்கள் அனைவரும் ஒன்று கூடிப் பாட உலகத் தமிழர் கீதம் ஒன்று மிகமிகத் தேவை. தமிழ்மொழியின் சிறப்பு, தமிழர்களின் வீரம், பெருமை, பண்பாடு ஆகியவற்றைப் பற்றிப் பெருமிதம் தொனிக்க இக்கீதம் அமைய வேண்டும். தமிழருக்கே உரிய நாதஸ்வர இசை பின்னணியில் ஒலிக்க வேண்டும்.

ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தனித்தனித் தேசிய உடைகள் உள்ளன. ஆனால் தமிழருக்கென்று தனியான தேசிய உடை இதுவரை இல்லை. உலகினுக்கே முதன் முதல் ஆடை தந்த தமிழன் தனக்கெனத் தனித் தேசிய உடை இல்லாமல் இருப்பது நாணத்தக்கது.

எனவே தமிழரது பாரம்பரியப் பண்பாட்டிற்கேற்ற தேசிய உடை வடிவமைக்கப்பட வேண்டும். உலகில் தமிழர்கள் கலந்து கொள்ளும் விழாக்களில் நமது தேசிய உடையுடன் மிடுக்காக நாம் கலந்து கொள்ள வேண்டும்.

மேற்கண்டவைபற்றி ஆராய்ந்து முடிவெடுக்க உலகத் தமிழர் மாநாடு ஒன்று கூட்டப்பட வேண்டும்.

உலகத் தமிழர்களின் சிந்தனைக்கு இவற்றை நான் படைக்கிறேன்.

(முற்றும்)

— ப. நெடுமாறன்
(தலைவர், தமிழ்த் தேசியக் கட்சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Dobermann Pincher X Rhodesian Ridgeback 3 மாத பெண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. 32, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். [22757]

### விற்பனையாகின்றன

இலகு ஆங்கிலம் (English Made Easy) ஆண்டு 4,5,6 ரூ. 19-50. இலகு தமிழ் இலக்கணம் ரூ. 12-50, தமிழ்த் தென்றல் - யாதுமூரானின் கவிதைகள் ரூ 20-00. பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். பொற்கமலதேவி பதிப்பகம். [22748]

### மனைப்பொருளியல்

மனைப்பொருளியல் மாதிரிகை வினா-விடை (ஆண்டு 10—11) வெளிவந்துவிட்டது. ஆக்கம்: செல்வி யசோதா துரைசிங்கம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (22760)

### ஆண்டு 6 அனுமதி

பாடசாலை அனுமதிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் 01 - 10 - 92 முதல் 16 - 10 - 92 வரை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். Bond Book - Stall, 582, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [கி-3539]

### றோணியோ

தரமான முறையில் குறித்த தவணையில் றோணியோ செய்து கொடுக்கப்படுகிறது. ஒரு பிரதி ரைப்பிங் ரூபா 8/-, றோணியோ 100 பிரதிகளுக்கு ரூபா 30/-. அறவிடப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை வெலிங்டன் சந்தி, கலை, வர்த்தகக் கல்லூரி முன்பாக, யாழ்ப்பாணம். (கி-3546)

### ஆண்டு - 5 புலமைப் பரிசில்

அடுத்த புலமைப் பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம், வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute, 582, Stanley Road, Jaffna. [கி-3540]

### எழுத்துக்கோர்ப்பாளர்

எழுத்துக்கோர்ப்பாளர்கள் தேவை. இருபாலாரும் அனுமதிக்கப்படுவர்; பயிலுனர்களுக்கும் இடமுண்டு. நேரில் வரவும்: பாரதி பதிப்பகம், (A. B Printers), 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (கி 3545)

### மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம்/றோமன் கத்தோலிக்கம்/ கிறிஸ்தவம்), வர்த்தகம் விவசாயம், மனைப்பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம், ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன; Bond Institute, 582, Stanley Road, Jaffna; (கி/3541)

## அகதிமுகாம்கள் புனரமைப்பு

வடமராட்சி, ஆக். 6

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் உள்ள அகதிகள் முகாம்கள் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

## இலவசமாக கண்ணாடி விநியோகம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் கண்பார்வை குறைந்த ஆயிரம் மாணவர்களுக்கு இலவசமாகக் கண்ணாடிகளை வழங்க முன்வந்துள்ளது;

இதற்கென சுமார் 60 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கண் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. [த-31]

## நாடு திரும்புவோர் தங்க வவுனியாவில் பாரிய முகாம்

வவுனியா, ஆக். 6

தமிழகத்திலிருந்து நாடு திரும்பும் ஈழ அகதிகள் இனிமேல் வவுனியாவிலேயே தங்க வைக்கப்படுவர்.

இதற்கென பாரிய அகதி முகாம் ஒன்று தற்பொழுது வவுனியாவில் அமைக்கப்பட்டு வருகிறது. 65 ஏக்கர் நிலத்தில் சுமார் 20 ஆயிரம் பேர் ஏககாலத்தில் தங்கக் கூடியதாக இந்தப் பாரிய அகதி முகாம் அமைக்கப்படுகின்றது. இதன் அமைப்புக்கு பல லட்சம் ரூபா செலவாகும். இத்தொகையை ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் முழுமையாகப் பொறுப்பேற்கும்.

தற்பொழுது தமிழகத்திலிருந்து நாடு திரும்பும் அகதிகள் திருமலை, மன்னார், வவுனியா ஆகிய வெவ்வேறு இடங்களிலுள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த பாரிய முகாம் அமைப்பு வேலைகள் முடிவுற்றதும் இவர்கள் அனைவரும் ஒன்று சேர்க்கப்படுவர்.

இத்திட்டத்தின் கீழ் இனிமேல் இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் அகதிகள் அனைவரும் இந்த வவுனியா முகாமில் மட்டுமே தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்படுவர். (த-ம)

## ★ சித்ராலயா ★
## இடம்மாற்றம்

இதுவரை காலமும் கோவில் வீதி 'நல்லூரில்' இயங்கிவந்த எமது நிறுவனம் 05 - 10 - 1992 திங்கள் முதல் ஸ்ரான்லி வீதியில் உள்ள பழைய இடத்தில் இயங்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

[5361]

## தொழிலாளர் கல்வி நெறி

யாழ். பல்கலைக்கழக தொழிலாளர் கல்வி நெறியில் சித்தியடைந்த மாணவர்கள் அனைவரையும் உயர் கல்வி வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வதற்காக நாளை 07 - 10 - 92 புதன் பி. ப. 3. 30 மணியளவில் யாழ். மருத்துவபீட சமூக மருத்துவத்துறையில் ஒன்று கூடுமாறு வேண்டுகின்றோம்.

— சக மாணவர்கள்.

[22777]

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

நீங்காத நினைவில்
அக்டோபர் - 6



திருமதி
**பிலோமினம்மா டானியல்**

(மறைந்த மக்கள் எழுத்தாளர், கே. டானியலின் மனைவி)

பிறப்பு: 1931-05-25
இறப்பு: 1986-10-06

எமது நல் வாழ்வின் உயர்ச்சிக்காகவும், மறைந்த தங்கள் கணவரின் அரசியல், இலக்கிய, சமுதாய உயர்ச்சிக்காகவும், உங்கள் கடமையைச் சரிவரச் செய்த உங்கள் பசுமையான நினைவுகள் எம் மனதில் என்றும் நிலைத்திருக்கின்றன.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்:

'வசந்தம்',
76/2, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(22775)

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி





**செல்வி சதாசிவம் யோகேஸ்வரி**
(சுரபி)

மலர்வு: 08 — 11 — 1968
உதிர்வு: 06 — 10 — 1990

மாடத்து நிலவொளிர மைவார்த்த விழியொளிரக்
கூடத்தில் நடனமிடும் குத்துவிளக் கொளிமங்க
பாடத்தில் ஆழ்ந்திருக்கும் பருவத்துப் பூங்கொடியே
ஆழிக்குள் நீ மறைந்த அவலம் தான் மறப்போமோ?

கொஞ்சுவாய் அழகு தன்னைக்
கொழிப்பாய் நீ என்றும் எங்கள்
நெஞ்சினில் மகிழ்ச்சிவெள்ளம் நிரப்புவாய் சுரபிநீயும்
அஞ்சியே வாழும் வாழ்க்கை
அவனியில் வேண்டாமென்றே
ஆழியில் கலந்துவிட்டாய் ஆண்டிரண் டானதம்மா!

அன்பு அப்பா, அம்மா,
அத்தான், அக்கா, தம்பி,
உறவினர்கள், நண்பர்கள்.

51/1, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

(22776)

## சபிண்டீகரண அழைப்பு

## லெப். கலையின்பன்
### (தியாகராஜாக் குருக்கள் இராமையா)

26 - 09 - 1992 அன்று ஆலங்கேணி நேரடி மோதலில் வீரச் சாவைத் தழுவிக் கொண்ட லெப். கலையின்பன் தியாகராஜாக் குருக்கள் இராமையா (நெல்லண்டை அம்மன் கோவில், தும்பளை பருத்தித்துறை) அவர்களின் சபிண்டீகரண கிருத்தியம் நாளை (07 - 10 - 1992) புதன்கிழமை நடைபெறும்;

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. சோமசுந்தரம் (அதிபர்),
சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜாக்-குருக்களும்,
சகோதரர்களும்.

நெல்லண்டை,
தும்பளை,
பருத்தித்துறை.

(22774)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 14 — 10 — 1972
மறைவு: 22 — 08 — 1992

அமரர்
**அருளம்பலம் திருமொழி அழகன்**
(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவனும்- 91 கணிதப் பிரிவு)

கண்கள் சிந்தும் கண்ணீர் - எமது
கவலையை ஆற்றாது காலம்
எங்கள் நெஞ்சில் உந்தன் நினைவை
நீங்காது பிரிவுத்
துன்பம் வாட்டும் துயரினைத் துடைக்க
வழியேது நண்பா - திருமொழி
இன்பம் வேண்டும் என்றேங்கி - நீ
ஏகிய பாதை வழி தொடர்ந்தே,
தாங்கா நோயில் தவழ்ந்து கொண்டே
காலன் வந்து சேர்ந்தானோ!

ஆறாற்றாது அழும் நண்பன்,
ப. வாசுதேவன்.

மீசாலை,
சாவகச்சேரி.

(22779)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உள்ளதைச் சொல்லலாமே!

கட்டைக்காட்டில் இருந்த தமது ஆயுதக் கிடங்கிலிருந்து ஐந்து கோடி ரூபாவுக்கும் அதிகம் பெறுமதியான நவீன ஆயுதங்களை விடுதலைப் புலிகள் இம்மாதம் இரண்டாம் திகதி கைப்பற்றிவிட்டனர் என்பதை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கடைசியாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்!

இராணுவத்தினரின் ஆயுதக் கிடங்கு இருக்கும் பகுதியைத் தீடீரென சுற்றிவளைத்து, காவலுக்கு நின்ற சிப்பாய்களைக் கொன்று [காவலரண்களை அழித்தும், இரண்டரை மைல் நீள இராணுவ வேலியை நிர்மூலமாக்கியும்] ஈழப் போரின் சரித்திரத்தில் இல்லாதவாறு மிக மிகப் பெருந்தொகையான ஆயுதங்களை விடுதலைப் புலிகள் இரண்டாம் திகதி அதிகாலை கைப்பற்றி இருந்தார்கள்!

ஆனால் அன்றைய தினமும், அடுத்த நாளும் இராணுவ ஆயுதக் கிடங்கிலிருந்து விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைப்பற்றியது குறித்து— தமக்கு ஏற்பட்ட தோல்வி குறித்து — பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களும், அரசாங்கத்தின் ஊதுகுழல்களான வானொலி, ரூபவாஹினியும் மூச்சுத் தானும் விடவில்லை!

வெள்ளிக்கிழமை இரவு ரூபவாஹினி தனது செய்தி ஒளிபரப்பில் கட்டைக்காடு என்ற பெயரையே உச்சரிக்கவில்லை! ஆனையிறவில் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றை ஆயுதப் படைகள் வெற்றிகரமாக முறியடித்து விட்டதாகத் தெரிவித்தது!! வானொலியோ கட்டைக்காட்டுப் பகுதியில் எந்தச் சம்பவமும் நடந்ததாகத் தானும் அறிவிக்காமல் "கப் சிப்" என்றிருந்தது!

தமக்கு நேர்ந்துவிட்ட மிகப் பெரிய இழப்பை வெளியே சொல்வது தமது தோல்வியை ஒப்புக்கொள்வதுபோல ஆகிவிடும் என்று இராணுவம்— பாதுகாப்பு அமைச்சு— அரசு எண்ணியிருக்கிறது!

மூத்த தளபதிகள் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன ஆகியோரை இழந்த பின்னர் படையினருக்குப் புலிகள் அடுத்தடுத்துப் பெரும் இழப்புகளை உண்டாக்கி வருகின்றனர். அவற்றை எல்லாம் படையினரும், சிங்கள மக்களும் அறிந்தால் தமது பலவீனம் தெரிந்துவிடும். இராணுவத்தை விட்டு விலகுவோர் எண்ணிக்கை மேன்மேலும் அதிகரிக்கும். இராணுவத் தீர்வின் மூலம் புலிகளை வென்று அதன் பின்னர் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப்போகிறோம் என்ற நிலைப்பாடு சிங்களவரிடையே எடுபடாது. அதனால் சிங்கள மக்கள் படைகளுக்கும் அரசுக்கும் எதிராகத் திரும்பி விடலாம் என்ற பீதி இராணுவத்தையும், அரசையும் பீடித்ததோ?!

புலிகளின் அக்டோபர்—2 சாதனை பல உலக சாதனைகளுக்கு நிகரானது. வியட்நாம் போராட்டத்தில் அமெரிக்கப் படைகளிடமிருந்து 300 ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்கு 'வியட்மின்' போராளிகள் சீனாவின் உதவியைப் பெற்றனர். விடுதலைப் புலிகள் எவரின் உதவியுமின்றி தாமே தனித்து நின்று ஸ்ரீலங்கா இராணுவத்திடம் இருந்து 275 ஆயுதங்களைக் கைப்பற்றி இருக்கிறார்கள்!

ஆயுதங்களை இழந்தது குறித்து விசாரணை வைத்து என்ன பலன்? விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்துவது என்பது தம்மால் இயலாத காரியம் என்பதை அரச படைகள் ஒப்புக்கொண்டு தமது உண்மையான நிலையை அரசுக்கும், சிங்கள மக்களுக்கும் இந்தக் கட்டத்திலாவது கூறுவது தான் உகந்தது. அதனைச் செய்யலாமே!

# நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் அரச தரப்பும் யோசனை சமர்ப்பிக்கும்

## 14ஆம் திகதி அறிவிப்பு வெளியாகும்?

கொழும்பு, அக். 6

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் அரசாங்கம் தனது சொந்த யோசனைகளைச் சமர்ப்பிப்பது பற்றிய சாதகமான நடவடிக்கைகள் இம்மாதம் 14ஆம் திகதி வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி "சண்டே ஐலண்ட்" இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

பெரும்பாலான அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தமது சொந்த யோசனைகளை தெரிவுக் குழுவிடம் ஏற்கனவே சமர்ப்பித்து விட்டன.

பிரதான கட்சிகளான ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுமே தங்கள் யோசனைகளை இதுவரை சமர்ப்பிக்கவில்லை.

ஆளும் கட்சி தான் முதலில் தமது சொந்த யோசனைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனினும்—

தாங்கள் சொந்த யோசனைகளைச் சமர்ப்பித்தால் அவை எதிர்க் கட்சிகளின் கடும் கண்டனத்துக்கு ஆளாகும் என்ற காரணத்துக்காக ஆளும் கட்சியினர் தமது யோசனைகளைச் சமர்ப்பிக்காது இருந்து வருகின்றனர்.

ஆனால் அரசாங்கம் தமது சொந்த யோசனைகளை முதலில் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கும் பட்சத்தில், முன்னர் எதிர்பார்க்கப்பட்டபடி அந்த யோசனைகள் கண்டனம் செய்யப்படமாட்டாது என்று அரசுக்கு சில எதிர்க் கட்சிகள் கோடி காட்டியிருப்பதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசின் யோசனைகளைக் கண்டிப்பதற்குப் பதிலாக, அந்த யோசனைகளை நன்கு படித்து தேவையானால் சில திருத்தங்களை சமர்ப்பிப்பது குறித்து எதிர்க்கட்சிகள் ஆலோசிக்கும் என்றும் அரசுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாதகமான நடவடிக்கைகள் இம்மாதம் 14 ஆம் திகதி வெளியிடப்படும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இனப் பிரச்சினைக்கு தெரிவுக்குழு தீர்வு ஒன்றைக் கொண்டு வரும் என்ற அதீத நம்பிக்கையில்லாவிடினும், நம்பிக்கையை முற்றாக இழந்து விடவில்லை என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை —

இனப்பிரச்சினைத் தீர்வு விஷயத்தில் எதிர்க்கட்சிகளிடையே கருத்துடன்பாடு இன்னும் ஏற்படவில்லை என்றும் —

பொது எதிரணி ஒன்றை உருவாக்குவதில் முனைந்துள்ள சுதந்திரக்கட்சி லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, டி. ஜே. வி. பி., ஸ்ரீலங்கா மக்கள் கட்சி [வை. பி. சில்வா] பிரிவு ஆகியன இந்த விஷயத்தில் மௌனஞ் சாதித்து வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

1988 இல் அமைக்கப்பட்ட ஜனநாயக மக்கள் அணி தயாரித்த இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகளையே இப்போதும் முன்வைக்க வேண்டும் என்று லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, டி. ஜே. வி. பி., ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகியன அபிப்பிராயம் தெரிவித்துள்ளன என்றும் —

இதற்கு சுதந்திரக்கட்சியும் மக்கள் ஐக்கிய முன்னணியும் உடன்பாடாக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வாக நாடாளுமன்றத் தெரிவுக் குழு சமர்ப்பிக்கும் யோசனையை ஏற்க வேண்டும் என்பதே சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடாகும்;

எனினும் மக்கள் ஐக்கிய முன்னணி சொந்த யோசனைகள் அடங்கிய திட்டம் ஒன்றை தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளது.

- இவ்வாறு "சண்டே ஐலண்ட்" வெளியிட்டுள்ளது.

(உ-எ)

## ஜி. சீ. ஈ. (சா.த) மாணவருக்கு முன்னோடி தேர்வு பரீட்சை

### இம்மாதம் 27 இல் ஆரம்பம்

டிசம்பரில் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடித் தேர்வுப் பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய் முதல் நவம்பர் மாதம் 3ஆம் திகதி செவ்வாய் வரை நடைபெறவுள்ளது.

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பாடங்களுக்குரிய முழுப் பாடத்திட்டத்துக்கும் அமைவாக நடத்தப்படும் இப் பரீட்சையில் தற்சமயம் பாடசாலைகளில் ஆண்டு 11இல் கல்வி பயிலும் மாணவர்கள் தோற்றுவர்.

இதுவரை பாடத்திட்டங்களைப் பூர்த்தி செய்யாதவர்கள் மேலதிக வகுப்புக்களை நடத்தி மாணவர்களை மேற்படி பரீட்சைக்குத் தயாரிப்படுத்துமாறு கல்விப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

முற்பகல் வேளைப் பாடங்கள் தினமும் காலை 8-30 மணிமுதல் 9-45 மணி வரையும் பின்னர் 9-45 மணி முதல் 11-30 மணிவரையும் இரு பகுதிகளாக இடம் பெறும்.

பிற்பகலில் தினமும் ஒரு மணிக்குப் பரீட்சை ஆரம்பமாகும். பரீட்சை அட்டவணை வருமாறு:-

★ 27 ஆம் திகதி முற்பகல்— தமிழ் மொழியும் இலக்கியமும் (பகுதி I, II), பிற்பகல்— தமிழ்மொழியும் இலக்கியமும் (பகுதி III).

★ 28 ஆம் திகதி முற்பகல்— ஆங்கிலம் (பகுதி I, II), பிற்பகல்— சமயம் (பகுதி I, II).

★ 29 ஆம் திகதி முற்பகல்— கணிதம் (பகுதி II), பிற்பகல்— கணிதம் (பகுதி I), தட்டெழுத்துத் தொகுதி (பகுதி I).

★ 30 ஆம் திகதி முற்பகல்— விஞ்ஞானம் (பகுதி II), பிற்பகல்— விஞ்ஞானம் (பகுதி I), தட்டெழுத்துத் தொகுதி (பகுதி II).

★ 31 ஆம் திகதி முற்பகல்— வரலாறும் சமூகக்கல்வியும் (பகுதி II), பிற்பகல்— வரலாறும் சமூகக்கல்வியும் (பகுதி I), தட்டெழுத்துத் தொகுதி (பகுதி III).

★ நவம்பர் 2 ஆம் திகதி முற்பகல்— தொழில்நுட்பப் பாடம் (பகுதி I, II), கருக்கெழுத்து, வர்த்தகமும் கணக்கியலும் (பகுதி II), பிற்பகல்— வர்த்தகமும் கணக்கியலும் (பகுதி I).

★ நவம்பர் 3 ஆம் திகதி முற்பகல்— அழகியல் (பகுதி I, II), பிற்பகல்— அழகியல்- சித்திரம் (பகுதி III).

## சிசில் மன்னார் விஜயம்

கொழும்பு, அக். 6

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரத்னா கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னாருக்கு விஜயம் செய்ததாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இவருடன் வடபகுதிக்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரிசில்வாவும் மன்னாருக்குச் சென்றிருந்தார்.

இவர்கள் மன்னாரில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டதுடன் அங்குள்ள இராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[த-ம]

## படையினரைப் பாதுகாக்க கிடுகுகள் அனுப்புங்கள்!

### சிங்களவரிடம் இப்படிக் கோரிக்கை

கொழும்பு, அக். 6

வடக்கு - கிழக்கு போர் முனையில் பதுங்கு குழிகளில் உள்ள படையினர் மழையில் நனைந்துவிடாமல் இருப்பதற்காக கிடுகுகளை அனுப்பி உதவும்படி, 'சிங்கள ஆரக்ஷ சன்விதானய' (சிங்களவர் பாதுகாப்பு இயக்க) தலைவரும் முன்னாள் அமைச்சருமான காமினி ஜயசூரியா சிங்கள மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் சில கிராமங்களுக்குக் குறுகிய கால விஜயம் ஒன்றை மேற்கொண்டு விட்டு கொழும்பு திரும்பிய பின்னர் திரு. ஜயசூரியா இந்த வேண்டுகோளை விடுத்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் பதுங்கு குழிகளைப் பாதுகாக்க 75 ஆயிரம் கிடுகுகள் தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பதுங்கு குழிகளில் மழையில் படையினர் பெரும் கஷ்டப்படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### மேற்கு நாடுகள்

## இலங்கை அகதிகளை திருப்பி அனுப்ப தீவிர ஆலோசனை

கொழும்பு, அக். 06

பல மேற்கு நாடுகள் அங்கு தங்கியுள்ள இலங்கை அகதிகளை மீண்டும் திருப்பி அனுப்புவது குறித்து தற்பொழுது தீவிரமாக ஆராய்ந்து வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக வடக்கு—கிழக்கிலுள்ள நிலைமைகளை அறிவதில் அவ் நாடுகள் ஆர்வமாயிருப்பதாகவும் —இது குறித்த அறிக்கைகளை அனுப்புமாறு கொழும்பிலுள்ள அவற்றின் தூதரகங்கள் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலுள்ள மேற்கு நாடுகளின் தூதுவர்கள் தற்பொழுது அடிக்கடி வடக்கு-கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா பகுதிகளுக்கு விஜயம் செய்து வருவது இந்த நோக்கத்திலானதே எனவும் தூதரக வட்டாரங்களை மேற்கோள் காட்டி அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவிஸ், கனடா, இந்தியா போன்ற நாடுகள் அங்கு தங்கியுள்ள இலங்கை அகதிகளை இங்கு திருப்பி அனுப்புவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளன. ஏனைய நாடுகளும் இதே வழிமுறையைப் பின்பற்ற ஆலோசித்து வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(த-ம)

## 80 மாடிக் கட்டடத்துடன் ஜெட் மோதி நொறுங்கியது

### அம்ஸ்ரடாமில் 200 பேர் பலி!

டெல்அவீவ், அக். 6

இஸ்ரேலுக்குச் சொந்தமான சரக்கு விமானம் ஒன்று அம்ஸ்டாமில் 80 மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதியுடன் மோதி தீப்பிடித்து நொறுங்கியதில் 200 பேர் பலியானார்கள்.

நேற்று முன்தினம் இரவு இந்த துயர சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அம்ஸ்ரடாமிலிருந்து இஸ்ரேல் தலைநகர் டெல்அவிவ் நோக்கிப் புறப்பட்ட "போயிங் 747" ஜெட் விமானமே புறப்பட்ட சில நிமிடங்களில் விழுந்து நொறுங்கியது.

சிபால் விமான நிலையத்திலிருந்து விமானம் புறப்பட்ட சில நிமிட நேரத்துக்குள் விமானத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டதாகவும் - விமானி விமானத்தை மீண்டும் விமான நிலையத்தை நோக்கித் திருப்ப முற்பட்டபோது அது 80 மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதியுடன் மோதியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர்களில் நால்வர் விமானச் சிப்பந்திகள் ஆவர்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அனுரா கை ஓங்குகிறதாம்

கொழும்பு, அக். 6

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாலிபர் அமைப்பில் கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்காவின் கை ஓங்கி வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரையில் அதன் வாலிபர் அமைப்பு பலம் பொருந்தியதாகக் காணப்படுவதனால் இந்த நிலமை கட்சியில் அனுராவின் நிலையை உயர்த்தும் எனவும் கூறப்படுகிறது

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அனுரா பண்டாரநாயக்காவை நியமிக்க கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் பலரும் விருப்பம் தெரிவித்திருப்பதும் அவதானிகளினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(த-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நகுலாம்பிகை ஆனந்தரத்தினம்

இராமநாதன் கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியையும், யாழ்ப்பாணக்கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. த. ஆனந்தரத்தினத்தின் அருமை மனைவியுமாகிய திருமதி நகுலாம்பிகை ஆனந்தரத்தினம் 05-10-92 திங்கட்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. சி. கணபதிப்பிள்ளை - திருமதி கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், சண்முகநாதன், காலஞ்சென்ற விவேகானந்தம், டாக்டர் சர்வானந்தம், திருமதி கமலாம்பிகை சிவசம்பு, திருமதி யோகாம்பிகை ஜெயரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிர்மலாதேவி (யாழ். கல்லூரி ஆசிரியை), சுசீலாதேவி, சிவரஞ்சினி, காலஞ்சென்ற நிரஞ்சனாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தம்பையா - திருமதி சிவகாமிப்பிள்ளை தம்பையா ஆகியோரின் மருமகளும், நித்தியரத்தினம் (யாழ். கல்லூரி ஆசிரியர்). ஆறுமுகநாதன். காலஞ்சென்ற குணரத்தினம் ஆகியோரின் மைத்துனியுமாவர்.

ஈமக்கிரியைகள் 06-10-92 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-30 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
த. ஆனந்தரத்தினம்

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

[22787]

### முத்துக்கிருஷ்ணர் மகாலிங்கம்

மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் உப்புக்கேணியடி, கச்சாய்வீதி, சாவகச்சேரியை வதிப்பிடமாகக் கொண்டவருமான மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய இளைப்பாறிய ஆசிரியர் திரு. முத்துக்கிருஷ்ணர் மகாலிங்கம் அவர்கள் 05-10-1992 இல் காலமானார். அன்னார் சொர்ணம்மாவின் அன்புக் கணவரும், திருமதி மலர்விழி சந்திரதாஸ் (ஜேர்மனி), திரு. ம. சொர்ணலிங்கம் [T. A. ஓமான்], செல்வி ம. கயல்விழி, திரு. ம. பாஸ்கரலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தந்தையும், திரு. கோ. சந்திரதாஸின் (ஜேர்மனி) அருமை மாமனாரும், கிரித்திகா, கிருசாஷ்த் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [06-10-92] செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வி ம. கயல்விழி
(மகள்)

உப்புக்கேணியடி,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

[இ/3449]

### திருமதி கந்தவனம் ஞானாம்பிகை

சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த கந்தவனம் ஞானாம்பிகை 5-10-92 இல் காலமானார்.

அன்னார் க. கந்தவனத்தின் (ஓய்வு பெற்ற எழுதுவினைஞர்) அன்பு மனைவியும், குகநந்தினியின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் (5-10-92) திங்கட்கிழமை பிற்பகல் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கந்தவனம்
(கணவன்)

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

[4987]

### திருமதி சமாதிலிங்கம் அழகேஸ்வரி
[வேலணை]

வேலணை மேற்கைச் சேர்ந்தவரும், திருநெல்வேலியில் வசித்தவருமான திருமதி சமாதிலிங்கம் அழகேஸ்வரி அவர்கள் காலமானார். அன்னார் காலஞ்சென்ற தம்பு சமாதிலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசையா - சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், டாக்டர் ச. செல்வரெத்தினம் (தௌலஸ் பாகே), திருமதி சரஸ்வதி இராமலிங்கம் (U. K), திரு. ச. சத்தியசீலன் (சிரேஸ்ட விரிவுரையாளர் வரலாற்றுத்துறை யாழ். பல்கலைக்கழகம்), செல்வி ச. சிவகாமசுந்தரி, காலஞ்சென்ற செல்வி ச. மணிமேகலாதேவி, ச அருந்தவலிங்கம், ச. ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி செ. செல்வராணி, திருமதி ச. அனுஷ்பா (ஆசிரியை யா / வேம்படி ம. கல்லூரி), காலஞ்சென்ற டாக்டர் க. இராமலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும், சாரதா, சரவணா, பிரதாபன், துர்க்கா, பிரியதர்ஷன், கோபிகாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திருமதி பொ. சுந்தரம், தி. எதிர்வீரசிங்கம், த. குலசேகரம்பிள்ளை, காலஞ்சென்ற த. நாகநாதபிள்ளை, திருமதி க. நகுலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக 6-10-92 செவ்வாய்க்கிழமை (இன்று) 12 மணியளவில் திருநெல்வேலி இந்து மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ச. சத்தியசீலன்
(மகன்)

20/1, பதிவுகாரர் ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு.

[22776]

வடக்கில் தமிழரைக் கொன்று

# கிழக்கில் சிங்களக் குடியேற்றத்துக்கு உதவியதே இந்தியா செய்த வேலை

## தீருவில் நினைவு விழாவில் யோகி

வடமராட்சி, அக். 6

ஈழத் தமிழ் மக்களுக்கு உணவு போடுவதாகக் காட்டிக்கொண்டு இந்திய இராணுவம் இங்கு வந்தது. தமிழருக்குப் பாதுகாப்பு வழங்குவதாகக் கூறிக்கொண்டு எங்கள் மண்ணில் அது காலடி வைத்தது.

ஆனால் அது வடக்கில் தமிழர்களைக் கொன்றது. கிழக்கில் விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்தி வைத்துவிட்டு சிங்கள அரசுடன் இணைந்து குடியேற்றம் நடப்பதற்கு ஒத்தாசையாக இருந்தது.

—இவ்வாறு தீருவிலில் நேற்று நடைபெற்ற பன்னிரு வேங்கைகளின் நினைவு நாள் விழாவில் பேசுகையில் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. யோகி தெரிவித்தார்.

இலங்கை - இந்திய கூட்டுச் சதியினால் பலாலியில் தமது இன்னுயிர் ஈந்த பன்னிரு வீரவேங்கைகளினதும் நினைவு விழா நேற்று மாலை தீருவில் சதுக்கத்தில் யாழ் மாவட்டக் கடற்புலிகள் பொறுப்பாளர் திரு மறவன் தலைமையில் நடைபெற்றது.

யாழ் குடாநாட்டு மக்களால் தீருவில் மைதானம் நேற்று நிரம்பி வழிந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் நினைவு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தென்மராட்சி, வலிகாமம், தீவகக் கோட்டங்களைச் சேர்ந்த மக்கள் உடுப்பிட்டிச் சந்தியிலிருந்து நடை பவனியாகவும் —

வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு, வடமராட்சி தெற்கு, வடமராட்சி மேற்கு மக்கள் நெடியகாட்டிலிருந்து நடைபவனியாகவும் தீருவிலை வந்தடைந்தனர்.

உடுப்பிட்டி, நெடியகாடு பகுதி வீதிகள், சந்திகள், பிரதான கேந்திர நிலையங்கள், விடுதலைப் புலிகள் முகாம்கள், சனசமூக நிலையங்கள், காவல்துறை நிலையங்கள், வல்லைச் சந்தி, நீர்வேலி, புத்தூர், ஆவரங்கால் ஆகிய இடங்களும் மின் விளக்குகளாலும் சிவப்பு மஞ்சள் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

நெடியகாட்டிலிருந்து வடமராட்சிப் பகுதி மக்களுடன் பன்னிரண்டு வேங்கைகளின் பெற்றோர் தமது பிள்ளைகளின் உருவப்படங்களை தாங்கிய வண்ணம் மேளதாள இசையுடன் அழைத்து வரப்பட்டனர். பெற்றோர் தீருவில் படங்களை வைத்து மாலை அணிவித்தனர்.

மாலை 5. 05 மணியளவில் தமிழீழ விசேட தளபதி திரு. சூசை தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். மாவீரர்களின் ஈகைச்சுடரையும் விசேட தளபதி திரு. சூசை ஏற்றி வைத்தார், வேங்கைகளின் தூபிகளுக்கு மணலாறு பொறுப்பாளர் திரு. சங்கர் மலரஞ்சலி செலுத்தினார்.

வேங்கைகளின் நினைவாக பன்னிரண்டு புகைக்குண்டுகள் விடப்பட்டன. யாழ் மாவட்ட பணிமனைப் பொறுப்பாளர் திரு பொன் தியாகம் வேங்கைகளின் குடும்பங்களுக்கு 'தீருவில் தீ' என்ற வெளியீட்டை வழங்கினார்.

தீவகப் பகுதி மக்கள் குமரப்பா, புலேந்திரன் உருவப்படம் கொண்ட ஊர்தியையும் எடுத்து வந்தனர்

திரு. யோகி தமது பேச்சில் மேலும் குறிப்பிட்டதாவது:-

இந்திய இராணுவத்தினதும், ஸ்ரீலங்கா இராணுவத்தினதும் கூட்டுச் சதியாலேயே இந்தப் பன்னிரு வேங்கைகளும் உயிரிழக்க நேர்ந்தது.

இவ் வேங்கைகளைக் கண்டால் சிங்கள இராணுவத்துக்கு நடுக்கம் ஏற்படும். எனவே சந்தர்ப்பம் பார்த்து அவர்களை சாக வைத்தார்கள்.

எதைக் கண்டும் அஞ்சாது, எந்தக் களத்திலும் நின்று இந்த மண்ணை மீட்க வேண்டும் என்ற உறுதியுடன் போராடியவர்கள் இவர்கள். திருகோணமலை எமது சரணாலயம் என்ற எண்ணத்துடன் போராடியவர்கள் இவர்கள்.

தமிழர்களை காப்பதாகக் கூறிவந்த இந்திய இராணுவம் அவர்களை அழித்தது. நாங்கள் நவீன ஆயுதங்களை வைத்திருப்போம்; அவற்றைக் கையாளுவோம்; திருப்பிச் சுடுவோம் என்பதை இந்திய இராணுவம் அப்போது உணரவில்லை.

எங்களுடன் மோத ஆரம்பித்ததும் அவற்றை எல்லாம் அனுபவத்தில் இந்திய இராணுவம் தெரிந்துகொண்டது - என்றார்.

(அ-165)

80 மாடி...

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காணாமற் போயிருப்பதாக அறிவிக்கப்படும் 209 பேரும் இறந்திருக்கலாம் என்று கருத முடிகிறது [illegible] நகர மேயர் தெரிவித்தார்.

[உ-எ-4-3]

தமிழினத்தைக் காக்கும்
வனவளத்தைக் காப்போம்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கரத்தினம் சாரங்கபாணி

உரும்பராய் தெற்கைச் சேர்ந்த திருமதி தங்கரத்தினம் காலமானார். இவர் காலஞ்சென்ற க. வே. சாரங்கபாணியின் மனைவியும், திருமதி ரதி பாலசிங்கம், செல்வி சுசீலா (ஆசிரியை உரும்பராய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் தாயாரும், க. தங்கராஜா (முன்னாள் சிறைச்சாலை அத்தியட்சகர்), காலஞ்சென்ற க. கனகரத்தினம் (சிறைச்சாலை அதிகாரி), க. மகேந்திரன், திருமதி புனிதவதி (திருகோணமலை) ஆகியோரின் சகோதரியும், பிரதிபா (ஆசிரியை கண்டி), கௌதமி (ஷப்ரா நிறுவனம்), பிரகலாதன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (6-10-92) பி. ப. 1 மணிக்கு நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சுசீலா சாரங்கபாணி

உரும்பராய் தெற்கு

[22783]

### குமாரசுவாமி இராஜேஸ்வரன்

கோவில் வீதி, கொக்குவில் கிழக்கை வதிப்பிடமாகக் கொண்டவரும், சிவாஸ் கிறீம் ஹவுஸ் உரிமையாளருமான செல்வன் குமாரசுவாமி இராஜேஸ்வரன் 05-10-92 இல் சிவபதமடைந்தார்.

அன்னார் இணுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. க. குமாரசுவாமி, திருமதி குமாரசுவாமி சரஸ்வதி (சுதுமலை)யின் அன்பு மகனும், கு. சண்முகநாதன் (அதிபர், கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), கு. செந்தில்மணி (கொக்குவில் மேற்கு), கு. சிவசுப்பிரமணியம் (தாவடி வடக்கு) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் மயானத்தில் (05-10-92) இல், தகனம் செய்யப்பட்டது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
கு. சண்முகநாதன்
(சகோதரன்)

(22788)

### திருமதி சேதுப்பிள்ளை அருணாசலம்

காரைநகரை பிறப்பிடமாகக் கொண்டவரும் கிளிநொச்சியை தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சேதுப்பிள்ளை அருணாசலம் 3-10-92 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மலாயன் பென்சனர் அம்பலவாணர் அருணாசலம் அவர்களின் அன்பு மனைவியும், கிளிநொச்சி D. 7. இல் வசிக்கும் அ. சுப்பிரமணியம், கிளிநொச்சி புது முறிப்பில் வசிக்கும் அ. லோகநாதன், கிளிநொச்சி ராஜன் ரெக்ஸ்ரையில் உரிமையாளரான அ. அம்பலவாணர் (மாணிக்கம்), காரைநகர் பாலாவோடை க. யோகாம்பிகை (ஆச்சி) ஆகியோரின் தாயாரும், கிளிநொச்சி D. 7. சு. இராஜேஸ்வரி, கிளிநொச்சி புது முறிப்பில் வசிக்கும் லோ. மோகனாம்பிகை, கிளிநொச்சி திருநகர் காலஞ்சென்ற மாணிக்கம் சரஸ்வதி, காரைநகர் பாலாவோடை அ. கணேசபிள்ளை, கிளிநொச்சி கணேசபுரம் அம்பலவாணர் (மாணிக்கம்), பவளராணி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (04-10-92) இல் கிளிநொச்சியில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. சுப்பிரமணியம்

D-7,
கிளிநொச்சி.

[22780]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06-10-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org